ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2126/33 - 2019 ජූනි මස 04 වැනි අඟහරුවාදා - 2019.06.04

*2126/33 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பொல்கஹவெல-பொத்துஹெர-அலவ்வை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் பொல்கஹவெல நீர்த்தாங்கி வரை 300 மில்லி மீற்றர் விட்டத்தை உடைய பிரதான நீர்க் குழாய்களை பொருத்துவதற்குத் தேவையான காணித்துண்டுகளின் பயன்பாட்டு உரிமையை எடுத்துக்கொள்ளத் தேவைப்படுவதனால், இங்கு கீழ் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,*
*இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2019, மே 28.*
*5/2/3/1472.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில், பொல்கஹவெல பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 942, கனேகொட தெற்கு கிராம அலுவலர் பிரிவில், கனேகொட தெற்கு கிராமத்தில் அமைந்த காணித்துண்டு எழுத்து "A", "B" மற்றும் "C" என குறிப்பிடப்பட்டுள்ள முழு விஸ்தீரணத்தில் சுமார் 2.5 பேர்ச்சஸ் அளவிலான "ஸ்டேசன் வீவ் எஸ்ட்டேட் (தோட்டம்)" எனும் பெயருடைய காணியில் கீழ்க்குறிப்பிடப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டுகள் மூன்று.*

காணித்துண்டு எழுத்து : "A"
காணியின் பெயர் : ஸ்டேசன் வீவ் எஸ்ட்டேட்
விஸ்தீரணம் : 1.40 பேர்ச்சஸ்

**காணியின் எல்லைகள் :**

வடக்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி ;
கிழக்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி ;
தெற்கு : சுமங்கல மாவத்தை (வீதி) ;
மேற்கு : டபிள்யூ. எம். காமினி வீரசிங்க உரிமை கோரும் காணி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

1. திருமதி டீ. எம். சமந்தா ரத்னமாலி,
இலக்கம் : 23/1, சுமங்கல மாவத்தை,
பொல்கஹவெல.

காணித்துண்டு எழுத்து : "B"
காணியின் பெயர் : ஸ்டேசன் வீவ் எஸ்ட்டேட்
விஸ்தீரணம் : 0.55 பேர்ச்சஸ்

**காணியின் எல்லைகள் :**

வடக்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி மற்றும் டீ. எம். சமந்தா ரத்னமாலி உரிமை கோரும் காணி ;
கிழக்கு : டீ. எம். சமந்தா ரத்னமாலி உரிமை கோரும் காணி ;
தெற்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி மற்றும் டீ. எம். சமந்தா ரத்னமாலி உரிமை கோரும் காணி ;
மேற்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

1. திரு. டபிள்யூ. எம். காமினி வீரசிங்க,
இலக்கம் : 22/1, சுமங்கல மாவத்தை,
பொல்கஹவெல.

காணித்துண்டு எழுத்து : "C"
காணியின் பெயர் : ஸ்டேசன் வீவ் எஸ்ட்டேட்
விஸ்தீரணம் : 0.55 பேர்ச்சஸ்

**காணியின் எல்லைகள் :**

வடக்கு : நீர்த்தேக்க வீதி ;
கிழக்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி ;

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

தெற்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி மற்றும் டபிள்யூ. எம். காமினி வீரசிங்க உரிமை கோரும் காணி ;
மேற்கு : டபிள்யூ. எம். காமினி வீரசிங்க உரிமை கோரும் காணி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

1. திருமதி டீ. எம். சமந்தா ரத்னமாலி,
இலக்கம் : 23/1, சுமங்கல மாவத்தை,
பொல்கஹவெல.

*06-561*

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு கம்பஹா-அத்தனகல்ல மற்றும் மினுவன்கொடை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் மினுவன்கொடை வேலைப் பொறுப்பதிகாரி அலுவலகக் காணிக்கான உட்செல்லும் பாதையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றின் வழியுரிமையை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதனை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, மே 28.
5/2/3/1473.

**அட்டவணை**

கம்பஹா மாவட்டத்தின், மினுவன்கொடை பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 125/2, மினுவன்கொடை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் மெடேமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள கோன்கஹவத்த அல்லது கோன்கஹவத்த கெபெல்ல என்றழைக்கப்படுகின்ற உத்தரவுபெற்ற நில அளவையாளர் திருமதி ஜீ. அபேகுணவர்தன அவர்களினால் தயாரிக்கப்பட்டுள்ள இல. 202 திட்டப்படத்தின் துண்டிலக்கம் 4 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள 10.09 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி-

வடக்கு : நீர் கால்வாய் ;
கிழக்கு : நீர் கால்வாய் மற்றும் உட்செல்லும் பாதையின் எஞ்சியுள்ள பகுதி ;
தெற்கு : இத்திட்டப்படத்தின் 5 ஆம் துண்டிலக்கக் காணி ;
மேற்கு : உட்செல்லும் பாதையின் எஞ்சியுள்ள பகுதி 1 மற்றும் 5 ஆம் இலக்க காணித்துண்டுகள்.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

திருமதி கே. ஏ. மாலா மங்கலிகா ராஜசூரிய களுஆரச்சி,
இலக்கம் : 7/3, வாடி வீடு வீதி,
மினுவன்கொடை.

*06-562*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.